பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆவணி 27 வியாழக்கிழமை (13.09.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 287

# ஆழிப்பேரலை அச்சத்தால் நேற்று கரையோர மக்கள் இடம்பெயர்வு

## வடக்கு - கிழக்கு - தெற்கு கடலோரங்களில் பெரும் பீதி

கொழும்பு, செப்ரெம்பர் 13

இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுக்கு அப்பால் ஆழ்கடலின் அடியில் நேற்று ஏற்பட்ட பெரும் பூகம்பத்தைத் தொடர்ந்து, இலங்கை உட்பட தென்கிழக்கு ஆசிய நாடுகளை மீண்டும் ஒரு தடவை ஆழிப்பேரலை தாக்கும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்குக் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பீதியுடன் இடம்பெயர்ந்தனர்.

நேற்று இருள் கவியும் நேரத்தில் திடீரென விடுக்கப்பட்ட இந்த எச்சரிக்கையை அடுத்து, கரையோரப் பகுதி மக்கள் கையில் அகப்பட்ட பொருள்களை, உடைமைகளை எடுத்துக்கொண்டு கரைக்கு அப்பால் உயரமான பிரதேசங்களுக்கு அடித்துப் பிடித்து இடம்பெயர்ந்தனர். (08 ஆம் பக்கம் பார்க்க)




# படகுப் பயணத்துக்கு முட்டுக்கட்டை நெடுமாறனும் தொண்டர்களும் கைது!


பழ.நெடுமாறன் கைதுசெய்யப்பட்டு பொலிஸா ரால் பஸ்ஸில் ஏற்றப்பட்ட பின்னர்....

## சாகும்வரை உண்ணாவிரதம் இருப்பதாக அறிவிப்பு

நாகப்பட்டினம், செப்ரெம்பர் 13

இலங்கையில் யுத்தத்தில் சிக்கி அவலப்படும் ஈழத் தமிழ்ச் சகோதரர்களுக்கு உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசியப் பொருள்களை படகுகளில் எடுத்துச்செல்வேன் என்று கூறுரைத்து, நாகப்பட்டினம் கரையில் நேற்று அம்முயற்சிகளில் ஈடுபட்டு, அதற்கு முட்டுக்கட்டை போடப்பட்டதால் அதை ஆட்சேபித்து வீதி மறியலில் ஈடுபட்ட பழ.நெடுமாறன் அங்கு வைத்துக் கைது செய்யப்பட்டார். அவருடன் அவரது தொண்டர்கள், ஆதரவாளர்கள் என பத்துப் பெண்கள் உட்பட சுமார் ஐந்நூறு பேரை தமிழகப் பொலிஸார் கைதுசெய்தனர்.

யாழ். குடாநாட்டுத் தமிழர்களுக்குத் தேவையான மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் படகுகளில் ஏற்றிக்கொண்டு தாம் நேற்று யாழ்ப்பாணம் புறப்படுவார் என நெடுமாறன் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இதற்காக அவர் தமது தமிழ்த் தேசிய இயக்க ஆதரவாளர்களுடன் நேற்றுக்காலை நாகப்பட்டினத்துக்கு வருகை தந்தார். அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. அங்கு கூடியிருந்த தமிழ்த் தேசிய (08 ஆம் பக்கம் பார்க்க)

# வெளிவிவகார அமைச்சராக விரைவில் பஸில் ராஜபக்ஷ!

கொழும்பு,செப். 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அவரின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ விரைவில் அரச தரப்பு எம்.பியாக நியமனம் பெறுவார் என்றும், அதையடுத்து அவர் வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படுவார் என்றும் அரசுடன்தொடர்புடைய வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

அரச தரப்பில் தேசியப் பட்டியல் மூலம் நியமனம் பெற்ற எம்.பிக்களில் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் கடும் சுகவீனம் அடைந்திருக்கின்றார் எனத் தெரிகின்றது.

எம்.பியாக அவர் பணிபுரிய முடியாத நிலையில் அவரது இடத்துக்கு பஸில் ராஜபக்ஷ தேசியப் பட்டியல் எம்.பியாக நியமிக்கப்படுவார் எனவும் தெரியவருகின்றது. அந்த நியமனத்தின் பின்னர் வெளிவிவகார அமைச்சராக அவர் பதவியேற்பார் எனக் கூறப்படுகின்றது.

சர்வதேச ரீதியில் அரசு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொண்டு வரும் தற்போதைய சூழலில் அவற்றைச் சமாளிப்பதற்காக தமக்கு மிக நெருக்கமான ஒருவரை வெளிவிவகார அமைச்சர் பதவியில் அமர்த்துவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விரும்புகின்றார் எனத் அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

பஸில் ராஜபக்ஷவை இப் பதவியில் அமர்த்துவதன் மூலம் பல்வேறு விடயங்களை சர்வதேச ரீதியில் சமாளிக்கலாம் என்று ஜனாதிபதி கருதுகிறார் எனவும் கூறப்படுகின்றது.

## 'நவ்றூ' தீவில் தங்கவைக்கப்பட்ட 83 தமிழர்களில் 72 பேருக்கு ஆஸியில் அகதி அந்தஸ்து

மெல்பேர்ண்,செப். 13

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்துக் கோரிய நிலையில் நவ்றூத் தீவில் உள்ள முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற 83 தமிழர்களில் 72 பேருக்கு அகதி அந்தஸ்து அளிக்கப்படும் என்று ஆஸ்தி ரேலிய அரசு நேற்று அறிவித்திருக்கின்றது.

இலங்கையில் இருந்து வெளியேறி, இந்தோனேஷியாவில் இருந்து படகு ஒன்றின் மூலம் கடல் மார்க்கமாக - சட்ட விரோதமாக - ஆஸ்திரேலியாவுக்குச் சென்ற வேளை ஆஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவுக்கு அருகில் வைத்து கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி ஆஸ்திரேலிய அரசினால் இவர்கள் 83 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

அதன் பின்னர் இவர்கள் அனைவரும் நவ்றூ தீவில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

தங்களை அகதிகளாக அங்கீகரிக்கக் கோரி 83 பேரும் தொடர்ச்சியாக உண்ணாவிரதம் போன்ற பல்வேறு போராட்டங்களை நடத்திவந்தனர்.

இந்த நிலையில் ஆஸ்திரேலிய அரசின் குடியேற்றத்துறை அமைச்சர் கெவின் ஆண்ட்ரூஸ் மேற்படி அகதிகள் 72 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கும் தகவலை நேற்று வெளியிட்டார் என்று கூறப்படுகின்றது.

அவர் இது விடயமாகக் கூறியவை வருமாறு:-

(08 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக் குழு நோர்வே விஜயம்

மனித உரிமைகள் இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையிலான குழுவொன்று நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிற்கான விஜயமொன்றினை மேற்கொண்டிருக்கின்றது.

அங்கு அக்குழுவினர் நோர்வே நாட்டின் முக்கிய பிரதிநிதிகளைச் சந்தித்து இலங்கையின் தற்போதைய நிலைவரங்கள் குறித்துக் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. (சி)

## முகமாலையில் மோதல்

கொழும்பு, செப். 13

முகமாலையிலுள்ள படையினரின் முன்னரங்க நிலையில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் ஆங்காங்கே தொடர்ச்சியாக மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் காலை 8.30 மணியளவில் அப்பகுதிக்குள் ஊடுருவித் தாக்க முயன்றதாக்க் கூறப்படும் விடுதலைப் புலிகளின் அணிக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளனர் என்று படைத் தரப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சம்பவத்தின் பின்னர் அப்பகுதியில் படையினர் நடத்திய தேடுதல் நடவடிக்கையில் விடுதலைப் புலி உறுப்பினர்கள் நால்வரின் சடலங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டன என்றும் படைத்தரப்பினர் கூறியிருக்கின்றனர்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து எதுவித தகவலும் வெளிவரவில்லை. (சி)

## ஊரடங்கு இன்று இரவு 9 மணிமுதல்

யாழ்ப்பாணம்,செப்.13

குடாநாட்டில் இன்று இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணிவரை ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று பலாலி படைத் தலைமையக ஊடகப் பிரிவு நேற்றிரவு தெரிவித்தது.

நாளை முதல் ஊரடங்கு நேரம் மாற்றப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாட்டி சிந்தாத்திரை அன்னை உற்சவம் இன்று ஆரம்பம்

குருநகர்,செப். 13

சாட்டி சிந்தாத்திரை அன்னை திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் இன்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. நவநாள் வழிபாடுகள் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நடைபெறவுள்ளன. 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணைநாதர் விழாவும் அன்னையின் திருச்சொரூப பவனியும் மறுநாள் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் நடைபெறவுள்ளன.

நவநாள் வழிபாடுகளை நெடுந்தீவு, கரம்பன், புங்குடுதீவு, நயினாதீவு, எழுவைதீவு, அனலைதீவு, ஊர்காவற்றுறை, நாரந்தனை ஆகிய பகுதிகளைச் சார்ந்த கத்தோலிக்க மக்கள் மற்றும் துறவற சபை, பக்திச் சபைகள் ஆகியன சிறப்பித்து நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சாட்டி சிந்தாத்திரை அன்னை யாத்திரைத் திருத்தலத்தின் பரிபாலகர் தெரிவித்தார். (அ-51)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

915 நீலம்

வெற்றி இலக்கங்கள்

32 39 40 49

இடபம்

11-09-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 4284957 - 4300482

ஜக்பொட் பரிசு ரூபா.1,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,846 | 10/- | 3,418,460/- |
| 2 இலக்கங்கள் | 31,381 | 20/- | 627,620/- |
| 1 இல. + லக்கினம் | 30,918 | 30/- | 927,540/- |
| 2 இல. + லக்கினம் | 2,858 | 100/- | 285,800/- |
| 3 இலக்கங்கள் | 837 | 500/- | 418,500/- |
| 3 இல. + லக்கினம் | 83 | 5,000/- | 415,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 1,000,000/- | - |
| மொத்தம் | | | 6,592,920/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 407,933 | | 7,616,420/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,763,100/-

தொடர் இல. 5176378 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2007 செப்டம்பர் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

'அபிவிருத்தி அதிர்ஷ்டம்' சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறு ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| கம்பஹா | 4291239-2-03 |
| பொலன்னறுவை | 4286493-5-94 |
| மட்டக்களப்பு | 4297700-6-26 |
| கண்டி | 4286082-7-62 |
| அனுராதபுரம் | 4292961-9-87 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் **பதஞ்சலி ஆனந்தமகேஸ்வரன்** அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி.

## மரண அறிவித்தல்

### அப்பையா மகாலிங்கம்

(புத்தளம் விநாயகர் ஸ்ரோர்ஸ்)

கோண்டாவில் கிழக்கு, நெட்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் புத்தளத்தை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய அப்பையா மகாலிங்கம் 10.09.2007 திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் அப்பையா - காலஞ்சென்ற அன்னலட்சுமி தம்பதியரின் புதல்வரும் கலஞ்சென்ற திரு.திருமதி சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும் சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் திருமகள், கலைச்செல்வி, பிரதீபன், கலைமகள் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமிர்தநாதன், பாலச்சந்திரன், அருந்தவநாதன், கேமணி ஆகியோரின் மாமனும் குணசிங்கம், பரமேஸ்வரன், பரமேஸ்வரி, பத்மாவதி, குணராசா, சிவனேசன், ஆகியோரின் சகோதரனும் கனகசபாபதியின் அன்பு மைத்துனரும் அபினா, லக்ஸன், மதுசன், விக்காசன், தர்சன், ஈசன், அபிசன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(13.09.2007) வியாழக்கிமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*
*தொ.பெ.:0777153604* (64817)

தகவல்: **ஐ.கனகலிங்கம்.**

# வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலய பெருந்திருவிழா நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப். 13

ஈழத்து திருப்பதி எனப் போற்றப்படும் வண்ணை வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய பெருந்திருவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. திருவிழாக்கள் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெவுள்ளன.

எதிர்வரும் 22ஆம் திகதி காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழா இடம்பெறவுள்ளது.

மறுநாள் 23ஆம் திகதி காலை 8 மணிக்கு வசந்த மண்டபப் பூசை இடம் பெற்று 9.30 மணிக்கு சந்திர புஷ்கரணியில் தீர்த்தத் திருவிழா இடம்பெறும். தொடர்ந்து திருவோண தீப பூசை, மகா யாக கும்பாபிசேகம் என்பன இடம்பெறும்.

முற்பகல் பூசைகள் 9 மணிக்கும், தம்ப பூசை 9.30 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை 10.15 மணிக்கும் இடம்பெறும்.

பிற்பகல் பூசைகள் 2.45 மணிக்கும் இரண்டாம் காலப் பூசை 3 மணிக்கும் தம்ப பூசை 3.15 மணிக்கும் வசந்த மண்டபப் பூசை மாலை 4 மணிக்கும் இடம்பெறும்.

கால சூழ்நிலைக்கு ஏற்ப பூசை நடைபெறும் நேரங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படலாம் என ஆலய ஆதீன மகாசபை தெரிவித்துள்ளது. (203)

# ஜனாதிபதியுடன் தொலைக்காட்சி உரையாடல்

கொழும்பு, செப். 13

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இம்மாதம் 21 ஆம் திகதி நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி அலைவரிசைகள் ஊடாக உரையாற்றவுள்ளார்.

அன்றைய தினம் இரவு 9 மணிமுதல் 11 மணிவரை இரண்டு மணித்தியாலங்கள் அவரது உரையாடல் ரூபவாஹினி மற்றும் ஐ.ரி.என். அலைவரிசைகள் மூலம் நேரடியாக ஒளிபரப்பாகும்.

ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்தன நேற்றைய வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இத்தகவலை வெளியிட்டார்.

அலரி மாளிகையில் இருந்தே இது ஒளிபரப்புச் செய்யப்படும். தற்கால அரசியல் நிலைமை தொடர்பாக ஜனாதிபதி விளக்கமாக உரையாற்றுவார்.

ஊடகவியலாளர்களும் இதில் கலந்துகொண்டு ஜனாதிபதியிடம் கேள்விகளைக் கேட்கலாம். இதற்காக ஒவ்வொரு ஊடக நிறுவனத்திலிருந்தும் ஒருவர் விசேடமாக அழைக்கப்படுவர்.- என்று அமைச்சர் மேலும் கூறினார். (சி)

# மன்னாரில் இளைஞர் சுட்டுக்கொலை

மன்னார்,செப். 13

மன்னாரில், பேசாலை எட்டாம் வட்டாரத்தில் இளைஞன் ஒருவர் நேற்றுமுன் தினம் இரவு சுட்டுக்கொல்லப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த சுபாஸ்கரி டானியல் பெர்னாண்டோ (வயது 25) என்பவேர சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

செவ்வாய்க்கிழமை இரவு வீட்டில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட இவர் நேற்றுக் காலை சூட்டுக் காயங்களுடன் சடலமாக நேற்று மீட்கப்பட்டார்.

கொலையுண்ட இளைஞனின் சடலத்திற்கு அருகில் திரைப்பட வி.சி.டி சிலவற்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர். மன்னார் மாவட்ட நீதிவான் ரி.ஜே.பிரபாகரனின் உத்தரவுக்கு அமைய சடலம் நேற்று பிற்பகல் 1.30 மணியளவில் மன்னார் பொது வைத்தியசாலையில் தலைமன்னார் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டது. (அ-1)


## உடன் விற்பனைக்கு

பைரகா புறொயிலர் குஞ்சுகள், பிறிமா பேட்டு குஞ்சுகள், தேவையான தீன் வகைகள், மருந்துகள் உடன் பெற்றுக்கொள்ளலாம்.

**திருமகள் களஞ்சியம்**
702, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3270

## உடன் தேவை

புறொயிலர், கல்பேட், ஊர் கோழிகள், ஊர் குஞ்சுகள் உடன் தேவை. தொடர்பு

**தாசன் பாம்**
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

## புறொயிலர் குஞ்சு விற்பனை

தரமான புறொயிலர் குஞ்சு 15.09.2007 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம் முன் பதிவு செய்யவும்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (64748)


## தவறிவிட்டது

சுட்டுக்கோம்பனை, அல்வாய் கிழக்கு, அல்வாய் என்னும் முக [illegible] தே.அ.அ.இல. 670410560V நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்கு [illegible] விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். (64743)

# அமெரிக்க நிதி உதவி

ஈராக், லெபனான் மற்றும் சிறிலங்கா போன்ற நாடுகளில் மோதல்கள் காரணமாக அகதிகளாகியுள்ள மக்களின் தேவைகளுக்கு உதவுவதற்கென 24 மில்லியன் அமெரிக்க டொலரை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் அனுமதித்துள்ளார். அமெரிக்க ராஜாங்க அமைச்சு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அவசரமான அகதிகள் மற்றும் இடம் பெயரும் மக்களின் எதிர்பாராத தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்தப் பணம் பயன்படுத்தப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## மரண அறிவித்தல்கள்

### சின்னட்டி இராசதுரை



சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னட்டி இராசதுரை 11.09.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் அமிர்தராணியின் அன்புக் கணவரும் சத்தியேந்திரா, சத்தியரஜனி, சத்தியமதி ஆகியோரின் தந்தையும் யுவதீசன், சிறிதரன், சுதா ஆகியோரின் மாமனும் சைதன்ஜா, சைதன்ஜன், சாயித்யன் ஆகியோரின் பேரனும் செல்லத்துரை, வீரசிங்கம், நல்லதம்பி, பழனிராசா, யோகராசா, நாகேஸ்வரி, நல்லம்மா, ஜெகதாம்பிகை, லீலா, லலிதா, காலஞ்சென்ற துரைசிங்கம் ஆகியோரின் சகோதரரும் மனோகரன், காலஞ்சென்ற பரமேஸ்வரநாதன், காலஞ்சென்ற தவமணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் இன்று (13.09.2007) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிற்சாமம்,*
*சங்கானை மேற்கு, சங்கானை.*

தகவல்: சிறீதரன் (மருமகன்).

### செல்வம் பரமேஸ்வரி



கட்டுவன், தன்னித்தாழ்வைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய், மூத்ததம்பி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வம் பரமேஸ்வரி அவர்கள் 08.09.2007 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதியரின் மகளும் செல்வத்தின் அன்பு மனைவியும் சுலக்சனின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (13.09.2007) வியாழக்கிழமை கல்கிசை பொதுமயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூத்ததம்பி லேன்,*
*மானிப்பாய்.* (64808)

தகவல்: **செல்வம்** (கணவர்).

### துரைராசா விஜயரட்ணம் (பப்பி)



இல. 36/1, ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராசா விஜயரட்ணம் (பப்பி) 11.09.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைராசா - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரத்தினம் மற்றும் இராசமணி தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தியின் அன்புக் கணவரும் இராஜேஸ்வரி, பவளராணி, கோமதி, சண்முகராசா, குலேந்திரன், லோகநாதன், விஜயராசா, கிருபாகரன், ரஜனி மற்றும் காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரின் சகோதரனும் தர்மராசா, தங்கராசா, இராஜேந்திரன், ரோகினி, கிரிஜா, கிரிஜாநிதி, புஸ்பரதி, திருமதி கிருபாகரன், கௌரீஸ்வரி, தங்கேஸ்வரன், வனமோகன், ராசன், சீலன், லதா, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*36/1, ஆசீர்வாதப்பர் வீதி,*
*நல்லூர்.* (64814)

தகவல்: **சாந்தி** (மனைவி), **து.பரமேஸ்வரி** (தாய்).

### குணரெட்ணம் கனகரெட்ணம்



யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குணரெட்ணம் கனகரெட்ணம் 11.09.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குணரெட்ணம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக் கணவரும் சந்தானலட்சுமி, கருணாகரன்(UK), திரிபுரசுந்தரம் (முன்னாள் மின்முகாரி, யா.மா.ச.), சிவகுமாரி ஆகியோரின் அன்பு அன்புத் தந்தையும் காலஞ்சென்ற ஜெகாசெந்தில்நாதன் (இளைப்பாறிய அரசாங்க அதிபர்), ஸ்ரீஸ்கந்தன் (இளைஞர் சேவைகள் மன்றம்), விமலாதேவி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புமாமனும் திருமதி ஸ்ரீபதி செந்தில்மதி, திருமதி வரதன் செந்தில்செல்வி, ஸ்ரீதர்சன், ஸ்ரீதிலக்சன், சிவஜீவன், புஷ்பாஞ்சலி ஆகியோரின்அன்புப் பேரனும் அருணின் அன்புப் பூட்டனு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12.09.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் யாழ்.கோம்பயன மணல் இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30,ஒடைலேன்,*
*வண்ணார்பண்ணை.*

தகவல்: **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி.டி.எம்.ஏ. தொலைபேசிகளுக்கு 'பக்ஸ்', இணைப்பு வசதியும் அறிமுகம்

## ரெலிக்கொம் பிரதிப் பொதுமுகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப்.13

சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளுடன் தொலைநகல் மற்றும் மேலதிக இணைப்பு வசதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என ரெலிகொம் நிறுவனத்தின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் வி.யோகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மோட்டோறோலா இணைப்புகளுக்குப் பதிலாக சி.டி.எம்.ஏ. இணைப்புகளைப் பெற்றவர்களும் இந்த வசதிகளை மேலதிக கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புக்கள் மூலம் இணையத்தைப் பார்வையிடுவதற்கான டேற்றா கேபிள், லப்ரொப், டெஸ்க்ரொப் கணனிகளுக்கான 'பீ-காட்கள்', தொலைநகல் இணைப்புகள் போன்றவை கடந்த 7ஆம் திகதி ரெலிக்கொம் நிறுவனத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மோட்டோறோலா தொலைபேசிக்குப் பதிலாக சி.டி.எம்.ஏ. இணைப்பு பெற்றவர்கள் தொலைநகல் (பக்ஸ்) வசதியும் தேவைப்படின் மேலதிகமாக 2ஆயிரம்ரூபாசெலுத்தியும்-

சி.டி.எம்.ஏ. தொலைபேசி இணைப்புகளைப் பெற்றவர்கள் மேலதிகமாக 8 ஆயிரத்து 470 ரூபாவைச் செலுத்தியும் தொலைநகல் வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

'டேற்றா கேபிள்', 'பீ - காட்கள்' தேவைப்படுவோரும் மேலதிக கட்டணங்களைச் செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார். (202)

## போக்கட்டி றோ.க. பாடசாலையில் அபிவிருத்திப் பணி முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், செப்.13

கொடிகாமம் போக்கட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் யேசு அகதிகள் பணி நிறுவனத்தினர் இரண்டரை லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தற்காலிக வகுப்பறைத் தொகுதி அமைத்தல், கிணறு புனரமைப்பு ஆகிய பணிகளை அந்நிறுவனம் மேற்கொண்டு வருவதாக பாடசாலை அதிபர் சி.பவளேந்திரன் தெரிவித்தார். (202-207)

# மாவட்டத்தின் 100 பாடசாலைகளில் சிறுவர் நாடகம் மேடையேற்றப்படும்

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாழ்கையில் உருவான 'கூடி விளையாடு பாப்பா' என்ற சிறுவர் நாடகம், செயல்திறன் அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மாவட்டத்தில் 100 பாடசாலைகளில் மேடையேற்றப்படவுள்ளது.

முதல் முறையாக நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு செங்குந்தா இந்து கல்லூரியில் மேடையேற்றப்படும்.

அதனை அடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையிலும் மேடையேற்றப்படவுள்ளன.

இந்து நாடகத்தை மேடையேற்ற விரும்பும் பாடசாலைகள், அமைப்புகள் 'செயல் திறன் அரங்க இயக்கம், அருளகம், ஆடிய பாதம் வீதி, திருநெல்வேலி' என்ற முகவரியுடனோ, 0777286220 என்ற தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

# உணவு உற்பத்திக்கு அதிகளவு 'அஜினமோல்ட்' பயன்படுத்தும் நிறுவனங்கள் மீது நடவடிக்கை

## மாவட்ட உணவுப் பரிசோதகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 13

உணவு உற்பத்தியில் 'அஜினமோல்ட்' சேர்த்து உற்பத்தி மேற்கொள்ளும் நிறுவனங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் மகாதேவன் தெரிவித்தார்.

குடாநாட்டில் உணவு உற்பத்தியில் ஈடுபடுகின்ற நிறுவனங்கள் பல அஜினமோல்ட் கலந்து உணவுகளைஉற்பத்திசெய்வது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உணவில் சுவையை ஏற்படுத்து வதற்கே அஜினமோல்ட் சேர்க்கப்படு கின்றது. ஆனால், பல நிறுவனங்கள் தமது உணவிற்கு அதிக சுவையை ஏற்படுத்துவதற்காக தேவைக்கு அதிகமான அஜினமோல்ட்டை உபயோகிக்கின்றன.

இவ்வாறான உணவுகளை உட்கொள்வோருக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தக் கூடிய நோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உருவாகின்றது.

தேவைக்கு அதிகமான அஜினமோல்டை பயன்படுத்தும் நிறுவனங்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-69)



பசுபிக் ஆசிய மூலவள நிறுவனத்தினால் (பார்க்) கடற்றொழில் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் சுழிபுரம்மேற்கு அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கப் பகுதிக்குட்பட்ட பயனாளிகளுக்கான பொருள்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிராம சேவையாளர் பயனாளி ஒருவருக்கு பொருள்கள் வழங்குவதைப் படத்தில் காணலம்.

## சங்கானைப் பிரதேச புற்று நோயாளருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம். செப்.13

சங்கானைப் பிரதேசத்திற்குட்பட்ட புற்றுநோயாளருக்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வடபிரதேச நல்லெழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் பட்டின சபை வீதி, சங்கானையில் உள்ள அதன் அலுவலகத்தில் வைத்து அன்பளிப்பு வழங்கப்படவுள்ளது. (203)

## துப்புரவுப் பணி

வடமராட்சி,செப்.13

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் பெருந்திருவிழாவை ஒட்டி கோயில் வீதிகள், சுற்றாடலை துப்புரவு செய்யும் நடவடிக்கையை பருத்தித்துறை பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

தினமும் காலைமுதல் இத்துப்புரவுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. (202-160)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், செப்.13

செப்ரெம்பர் 15 ஆம் திகதியை உலகளாவிய இரத்தான தினமாக பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா பிரகடனம் செய்துள்ளார்.

இதனையொட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள சாயிநிலையத்தில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் இரத்ததான முகாம் ஒன்றை நடத்துவர். (202)

* * *

யாழ்ப்பாணம், செப். 13

அறவழி 'வூஸ்க்' தொழிற்பயிற்சி நிலையத்தின் திறப்பு விழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு. சாவகச்சேரி கண்டி வீதியில் அமைந்துள்ள அறவழி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

அறவழி போராட்டக் குழுவின் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்து கொள்வார். (202-207)

# கச்சதீவு ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரி உயர் நீதிமன்றில் வழக்குத் தொடரவேண்டும்

## பாரதீய ஜனதாவின் இல. கணேசன் சொல்கிறார்

சென்னை,செப்.13

ராஜீவ் காந்தி - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தை இலங்கை உயர் நீதிமன்றம் ரத்துச் செய்தது. அதேபோல் கச்சதீவு ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவேண்டும்.

இவ்வாறு பாரதீய ஜனதாக் கட்சியின் மாநிலத் தலைவர் இல. கணேசன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:

இலங்கையில் தமிழர்கள் உண்ண உணவு இல்லாமல் ,நோய் நொடியால் செத்து மடிந்து வருகிறார்கள். மத்திய அரசு இனியும் வேடிக்கை பார்க்கக்கூடாது. தமிழர்களுக்கு சரிசமமான வாழ்வுரிமை கிடைக்க அக்கறை காட்டவேண்டும்.

தமிழக மீனவர்களும் பக்தர்களும் கச்சத்தீவு சென்றுவர ராஜீவ் - ஜெயவர்த்தன ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டிருந்தது. ஆனால் அதை செயற்படுத்தவில்லை. உயர் நீதிமன்றில் வழக்கு தொடராவிட்டால் பாரதீய ஜனதாவே வழக்கு தொடரும்.

தமிழ் நாட்டில் பல நடிகர்கள் இதற்கு முன்புள்ள உதாரணத்தை கருத்தில் கொண்டு கட்சி தொடங்குவார்கள்.

எம்.ஜி.ஆர்., எம்.டி. ராமராவ் வெற்றி பெற்றார்கள். நிழலாக இருந்து நிஜமாக மாறி வெற்றி பெற்றவர்கள் குறைவு. தமிழ் நாட்டில் ஏற்கனவே 235 அரசியல் கட்சிகள் வந்து விட்டன - என்றார்.

## பருத்தித்துறை பிரதேசத்தில் மத்தியஸ்தர் சபை அமைப்பு

வடமராட்சி,செப்.13

வடமராட்சி வடக்குப் (பருத்தித்துறை) பிரதேச செயலர் பிரிவில் மத்தியஸ்தர் சபை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை அண்மையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

மத்தியஸ்தர் சபைக்கான உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டதும் இப்பிரிவில் மத்தியஸ்தர் சபை செயற்பட ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (202-16)

## மலர் வெளியீடு

சுழிபுரம்,செப்.13

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் நூற்றி இருபத்தைந்தாவது நிறைவு மலர் இம்மாத முடிவில் வெளியிடப்படவுள்ளது.

அச்சுத்தாள்களுக்கு குடாநாட்டில் ஏற்பட்ட தட்டுப்பாட்டால் அச்சிடும் வேலைகள் தாமதமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மலர் யாழ்ப்பாணம், கொழும்பு, வெளிநாடுகள் பலவற்றிலும் வெளியிடப்படவுள்ளன. (202-28)

## குரக்கன் ஒட்டு அறுவடை ஆரம்பம்

சுழிபுரம்,செப்.13

சுழிபுரம் பகுதியில் குரக்கன் ஒட்டு அறுவடை நடைபெற்று வருகின்றது.

இந்த ஒட்டு கட்டுக்கட்டாக சுழிபுரம் சத்தியக் காட்டுச் சந்தைக்கு விற்பனைக்காக தினமும் கொண்டு வரப்படுகின்றது. இவற்றை கால்நடை வளர்ப்போர்கள் நல்ல விலை கொடுத்து வாங்கிச் செல்வதை காணமுடிகின்றது.

வைக்கோல் தட்டுப்பாட்டை இந்த குரக்கன் ஒட்டு நிமித்தி செய்வதாக தெரிவிக்கப்படுகின்றது. (202-28)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

நல்லூர்பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் நாவலர் மணி மண்டபத்தில் பிற்பகல் 3 மணி தொடக்கம் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களம் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில், இன்று வியாழக்கிழமை 'ஈழத்தில் வைரவர் வழிபாடு' என்னும் தலைப்பில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சொற் பொழி வாற்றுவார். ஸ்ரீ முருகன் இந்து அபிவிருத்தி அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறும். (203-79-111)

# யாழ். மாநகர சனசமூக நிலையங்களுக்கு ஸ்ரீகாந்தா 2, 75, 000 ரூபா ஒதுக்கீடு

நல்லூர்,செப்.13

யாழ். மாநகரசபைக்குட்பட்ட சனசமூக நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளின் அபிவிருத்திப் பணிகளுக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். ஸ்ரீ காந்தா 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். பன்முகப் படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளார்.

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 25 ஆயிரம் ரூபாவும் நல்லூர் தெற்கு ஸ்ரீ முருகன் சனமூக நிலையமின் இணைப்புக்கு 25 ஆயிரம் ரூபாவும் -

அரியாலை திருமகள் சனமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு ஒரு லட்சம் ரூபாவும் நல்லூர் அரசடி சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்பு மற்றும் தளபாட கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் -

திருநெல்வேலி இராமநாதர் வீதி கலைவாணி சனசமூக நிலைய தளபாடக் கொள்வனவுக்கு 50 ஆயிரம் ரூபாவும் நாச்சிமார் கோயில் காமாட்சி அம்மன் முன்பள்ளிக்கு 25 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

## ஊர்காவற்றுறையில் பசுப்பால் தட்டுப்பாடு

ஊர்காவற்றுறை,செப்.13

ஊர்காவற்றுறையில் பசுப்பாலுக்கு பலத்த தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

மாடுகளுக்குத் தீவனங்களைப் பெற்றுக்கொள்வது இங்கு மிகுந்த சிரமம். பசுமாடுகள் களவாடப்படுவது போன்ற காரணங்களால் இங்கு பசுப்பாலைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள உணவகங்களில் பால் தேநீருக்கு பால்மாவையே பயன்படுத்த வேண்டியுள்ளதாகத் தேநீர்க்கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர். (202-51)

# நெற் பயிர்களைக் கால்நடைகளிடமிருந்து பாதுகாக்க தென்மராட்சியில் முட்கம்பிகள் அமைக்கப்படும்

தென்மராட்சிப் பிரதேசத்தில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள காலபோக நெற்செய்கைப் பயிர்களைக் கால்நடைகளிடமிருந்து பாதுகாக்க முட்கம்பி வேலிகள் அமைக்கப்படவுள்ளன.

விவசாயத் திணைக்களமும் ... இணைந்து முட்கம்பி... களை அந்தந்த விவசாய சம்மேளனங்களுக்கு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வருடம் கட்டாக்காலி கால்நடைகளால் நெற்பயிர்கள் அழிக்கப்பட்டமை தொடர்பாக விவசாய சம்மேளனங்களால் தெரிவிக்கப்பட்டதையடுத்து பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)

## சுழிபுரத்தில் நெல் விதைப்பு மும்முரம்

சுழிபுரம்,செப்.13

சுழிபுரம் பகுதியிலுள்ள நெல் வயல்களில் காலபோக விதைப்பு மும்முரமாக நடைபெற்று வருகின்றது.

இவ்வாரம் பெய்த மழையைத் தொடர்ந்தே விதைப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல் விதப்பில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றனர். (202-28)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3ஆம் ஆண்டில் முக்குழித்த நினைவலைகளுடன்...



தோற்றம் 17 * 07 * 1940

மறைவு 18 * 08 * 2004

### அமரர் பொன் நடேசன்

(இளைப்பாறிய அதிபர்)

திதி: துதியை 13.09.2007

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்ததனால்
வானுறையும் தெய்வமாகினீர்"

மூன்றாண்டென்ன மூவாயிரமானாலும் மறக்கும் உருவமல்ல...
உங்கள் தத்துவமான வார்த்தைகள் மறக்கக் கூடியதுமல்ல...
ஆயிரம் உறவுகளிலிருந்தாலும் உங்களைப் போலல்லவே...
கணம்கணம் உங்கள் ஞாபகமென்றால் கருத்தும் கலங்கிடுமே...
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அண்ணா வீதி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
(சி/53635)

என்றும் பிரியாது வாழும்:
குடும்பத்தினர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 Kg இற்கு மேல் வளர்ச்சிய டையக் கூடிய BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 13.09.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

- ராஜீவ்- நவாலி றோட், ஆனைக்கோட்டை.
- திருமகள் களஞ்சியம்-சிவலிங்கப்புளியடி,யாழ்ப்பாணம்.
- மதுரா- ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
- P.ரவி- தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. (64713)

தொ.பே.இல.222 3529, 222 2867

## தவறிவிட்டது

பூதன்வளவு, மல்லாகத்தைச் சேர்ந்த மயில்வாகனம் திருக்குமாரன் என்பவருடைய தே.அ.அட்டை (640960825V), விசேட அ.அட்டை (0907009362), அலுவலக அடையாள அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் மல்லாகத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் 07.09.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் வலிகாமம் வடக்கு பிரதேச சபை, மல்லாகத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.(சி/53661)

## சமய சந்நிதிகளில்

யாழப்பாணம்,செப் 13

ஆதிமயிலிட்டி காசிப்பூதராயப் பெருமானின் அலங்காரத் திருவிழா கடந்த 31ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8 மணி முதல் சங்காபிசேகம் நடைபெற்றுத் திருவிழா நிறைவடையும்.

அன்று மாலை திருவூஞ்சல் நடைபெற்று சுவாமி வீதியுலா வருவார். (203)

* * *

சுழிபுரம்,செப் 13

வட்டு வடக்கு கற்பக வினாயகர் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

ஆவணிச் சதுர்த்தி தினமான நாளை மறுதினம் சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(202-28)

* * *

யாழ்ப்பாணம்,செப்13

தெல்லிப்பழை துர்க்கா தேவி ஆலய மணவாளக் கோலத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

அன்று காலை 6 மணிக்கு சங்காபிசேகமும் பிற்பகல் 3.30 மணிக்கு வசந்த மண்டப் பூசையைத் தொடர்ந்து ஊஞ்சல் தண்டிகைத் திருவிழாவும் நடைபெறும். (203)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
### வடிவநாதன் கஜப்பிரவீன்

அன்னை மடியில் 19*08*1986


அநியாய அழிப்பில் 31*07*2007

எம்மோடு கூடி வாழ்ந்து
காலன் எங்கு கூட்டிச் சென்றானோ?
இறைவா! உம்மை இறைஞ்சுகின்றோம் அவரின் ஆத்மசாந்திக்காக.

7/1, அன்னசத்திர லேன்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (64741)

பிரிவால் வாடும்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
### சரவணமுத்து சதாசிவம்

(சாண்டோ மாஸ்ரர் - ஓய்வுபெற்ற அதிபர்)

தோற்றம் 06*12*1922

மறைவு 14*08*2007

அன்னார் நோயுற்றிருந்த வேளையிலும் மரணச் செய்தி அறிந்த வேளையிலும் எமது துயரில் பல்வேறு வழிகளாலும் பங்கேற்ற அனைவருக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (13.09.2007) வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

305, ஆனந்த வடலி வீதி,
அரியாலை. (64708)

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## எங்கள் அன்புத் தெய்வத்திற்கு ஆண்டு ஒன்று

அமரர்
### சுப்பிரமணியம் பசுபதி

தோற்றம் 29-11-1935 மறைவு 26-08-2006

திதி: துதியை
(13-09-2007)



ஆண்டொன்று ஆனதுவோ–அப்பா! நீங்கள்
அருகிருந்தெம் மனம் நிறைந்த
ஆதரவுக் கேங்குகிறோம்!
வழிகாட்டும் ஒளியாய்–எம் விழியாய்
உம் வார்த்தைகள் எம்மோடு என்றும்.......
வாழும்.....! வணங்குகிறோம்!

பசுபதீயம், கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

-குடும்பத்தினர்

## நாளை...

NVDAG அறவழி - வூஸ்க் WUSC

### தொழிற்பயிற்சி நிலையத் திறப்பு விழா

கனேடிய உலக பல்கலைக்கழக சேவையுடன் இணைந்து அறவழிப் போராட்டக் குழு நடத்தும் மின் ஒட்டுப் பயிற்சி/ தோல் உற்பத்திப் பொருள்கள் தயாரிப்பு பயிற்சி நெறிகள் ஆரம்பம்.

காலம்: நாளை (14.09.2007) வியாழக்கிழமை
நேரம்: முற்பகல் 10.30 மணி
இடம்: அறவழி செயலகம் - கைதடி, நுணாவில்

தலைவர்: திருமிகு வி.ஸ்ரீசக்திவேல் அவர்கள்
தலைவர் - அறவழி

பிரதம விருந்தினர்: திருமிகு க.கணேஸ் அவர்கள்
மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்: திருமிகு வே.ஜெயராஜசிங்கம் அவர்கள்
பிரதி வெளிக்களப் பணிப்பாளர்,
கனேடிய உலக பல்கலைக்கழக சேவை

திருமிகு விக்டர்மோசஸ் அவர்கள்
மாவட்ட முகாமையாளர், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் - இலங்கை, யாழ்ப்பாணம்

திருமிகு செ.ஸ்ரீனிவாசன்
பிரதேச செயலர், தென்மராட்சி.

ஆர்வலர்கள், பயிலுநர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

அறவழிப் போராட்டக் குழு
NVDAG.

(64651)

## 3ஆம் ஆண்டு நினைவு



அமரர் உயர்திரு.
### எலியாஸ் ஜெயராஜா

(பிரபல கட்டட ஒப்பந்தகாரரும்
A.J.R. Associated Construction
சாமினி ஹாட்வெயார் உரிமையாளரும்)

அன்னையின் அணைப்பில் 23*01*1943

ஆண்டவன் அணைப்பில் 13*09*2004

"இன்றே நீ என்னோடு வான்வீட்டில் இருப்பாய் என்று உறுதியாக நான் உனக்குச் சொல்லுகின்றேன்" லூக் 23:43

உள்ளத்தின் உணர்வுகளின் உந்துதலினால் உதிரத்தைப் பாலாக எமக்கூட்டிய எம் உயிரினும் மேலானவரே, குடும்பத்தின் ஒளிவிளக்காகவும் நற்தலைவனாகவும் தந்தையாகவும் சகோதரனாகவும் அன்போடும் பண்போடும் பாசத்தோடும் பேணிப் பாதுகாத்து அன்பினை அள்ளிச்சொரிந்து ஆசையுடன் அன்புச் செல்வங்களை வளர்த்து, இன்பமாய் வாழவைத்து எகையை நேசித்து உவப்புடன் உலாவந்து, ஊராரை ஆதரித்து நல் வழிகாட்டியாய் ஊருக்கு உபகாரியாய் உற்றதோர் நண்பனுமாய் வாழ்ந்து, ஐக்கியம் காக்கவென ஒருமனதாய் சிந்தித்து மெழுகுவர்த்தியாக தன்னையே உருக்கி ஒளியூட்டிய எங்களின் குடும்பத் தலைவனுக்கு இனிய நினைவுகளை இதயங்களில் சுமந்தவண்ணம் நிற்கின்றோம்.

இல.2/1, மருதடி வீதி, (64739)
யாழ்ப்பாணம்.

உனது பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமக்கள், ...


## COMPUTER EXPRESS
### INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2007 80% off

A/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science, 4 Months, ~~8,250/=~~ 1,650/= | Honours Diploma in Computer Science, 5 Months, ~~10,500/=~~ 2,100/= | Diploma in Web page Designing, 4 Months, ~~8,250/=~~ 1,650/= |
| Diploma in Graphic Desining, 4 Months, ~~8,250/=~~ 1,650/= | Diploma in Desktop Publishing, 4 Months, ~~7,250/=~~ 1,450/= | Diploma in Hardware Engineering, 3 Months, ~~7,250/=~~ 1,450/= |
| Diploma in Auto CAD, 3 Months, ~~7,250/=~~ 1,450/= | Diploma in Microsoft Office, 3 Months, 1,000/= | Accounting Package, 3 Months, ~~8,250/=~~ 1,650/= |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 14/09/2007 11AM
Batch II : 15/09/2007 12PM
Batch III : 16/09/2007 12PM
Batch IV: 19/09/2007 11AM

கம்ப்யூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். ... கணனிப்பயிற்சி.

September 30ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்துகொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசிகளை 2 மணி நேரம் நிறுத்தி வைத்து நூதனப் போராட்டம்!

## 17 ஆம் திகதி நடத்த எதிரணி அழைப்பு

கொழும்பு, செப்.13

கையடக்கத்தொலைபேசிப் பாவனைக்கான வரியை அரசு கூட்டியிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில் சுமார் இரண்டு மணி நேரம் கைத்தொலைபேசிகளை செயலிழக்க செய்யும் நூதன போராட்டம் ஒன்று இடம்பெறவிருக்கின்றது.

ஐ.தே.கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு ஆகியன கூட்டாக இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருக்கின்றன.

எதிர்வரும் 7 ஆம் திகதி காலை 9 மணி முதல் 11 மணிவரை இந்தப் போராட்டம் நடத்தப்படவிருக்கிறது.

கையடக்கத் தொலைபேசிகளுக்கான வரியை 2.5 வீதத்தில் இருந்து பத்து சதவீதமாக அதிகரித்திருப்பதையும் ஒவ்வொரு கையடக்கத் தொலைபேசிக்கும் வருடாந்தம் 600 ரூபா வரியாக அறவிடவுள்ளதையும் எதிர்த்தே இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என ஸ்ரீலசுகட்சி மக்கள்பிரிவு அமைப்பாளர் சிறிபதி சூரியாராய்ச்சி கூறினார்.

நேற்று முன்தினம் எதிர்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே சிறிபதி சூரியாராய்ச்சி இதனைத் தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளர்கள்- கட்சி, அரசியல் போதங்களுக்கு அப்பால்- ஒன்று திரண்டு அன்று காலை 9 மணிமுதல் 11 மணிவரை தமது கையடக்கத் தொலைபேசிகளை செயலிழக்கச் செய்து தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

இது தனிப்பட்ட ஒரு கட்சியின் போராட்டம் அல்ல; இது ஒரு மக்கள் போராட்டம். தற்பொழுது நாடெங்கிலும் 64 லட்சம் கைத்தொலைபேசிப் பாவனையாளர்கள் இருக்கின்றனர். பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், மீனவர்கள் உட்பட சகல பொதுமக்களும் இப்புதிய வரிவிதிப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அனைவரும் இப் போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும்- எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (சி)

# முதியோருக்கு கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.13

சர்வதேச முதியோர் வாரத்தையொட்டி யாழ்.பிரதேச செயலகத்தால் முதியோர்களிடையே கட்டுரைப் போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் 60 வயதிற்கு மேற்பட்டோரை எதிர்வரும் 18 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (202)

## லக்ஷ்மன் கதிர்காமர் கொலை

# சந்தேக நபர்கள் ஐவருக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, செப். 12

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்டிருந்த சந்தேக நபர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் குறித்து, இதுவரை சட்டமா அதிபரின் ஆலோசனைகள் கிடைக்கவில்லை என்று கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நேற்று முன்தினம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இந்த வழக்குத் தொடர்பான விசாரணைகள் மற்றும் குறிப்புகள் சட்ட மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன எனவும், இருப்பினும் அவை குறித்த மேலதிக விடயங்கள் சட்டமா அதிபரினால் தமக்குத் தரப்படவில்லை எனவும் கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றில் புலனாய்வுத் திணைக்களம் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

இந்தநிலையில் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள ஐந்து பேரையும் இம்மாதம் 25ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் சரோஜினி குசல வீரவர்த்தன உத்தரவிட்டார். (சி)

# வெளிநாட்டுப் பயணங்களைத் தவிர்க்குமாறு அரச எம்பிக்களுக்கு ஜனாதிபதி செயலகம் அறிவுறுத்து

கொழும்பு,செப்.13

வரவு - செலவுத் திட்ட விவாதம் இடம்பெறும் காலத்தில் அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி செயலகத்தால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பின்போது அரசைக் கவிழ்க்க எதிர்க்கட்சிகள் முயற்சி எடுப்பதையடுத்தே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரும் பிரதம கொறடாவுமான ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே கடந்த 6 ஆம் திகதி முதல் டிசெம்பர் 14 ஆம் திகதி வரை அரச நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுப் பயணங்களை தவிர்த்து, நாடாளுமன்றத்துக்கு சமுகமளிக்க வேண்டும் என்று கடிதம் மூலம் கோரியுள்ளார். (1)

# மன்னார் அகதிகளின் நிலைமை; நாடாளுமன்ற உறுப்பினர் ஆராய்வு

மன்னார்,செப்.13

மன்னாரில் கடந்த முதலாம் திகதி படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், வினோ நோதராதலிங்கம் ஆகியோர் நேற்று முன்தினம் மன்னாருக்கு வந்தனர்.

நானாட்டான் மகாவித்தியாலயம், முருங்கன் மகாவித்தியாலயம்,டொன் பொஸ்கோ தொழில்நுட்பக் கல்லூரி ஆகியவற்றில் தங்கியுள்ளவர்களை அவர்கள் பார்வையிட்டு நிலைமைகளைக் கேட்டறிந்தனர்.

அவர்களின் இயல்பு வாழ்க்கையை சீராக்குவது குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆராய்ந்தனர். (1)

# வெளிநாட்டுப் பிரஜைகளாலேயே நாடு இன்று நிர்வகிக்கப்படுகிறது

## சிறிபதி சூரியாராய்ச்சி கூறுகிறார்

கொழும்பு, செப். 12

அமெரிக்கா பல ஆயிரம் கோடி டொலர்களை ஈராக்கில் செலவிட்டபோதும் அங்கு ஓர் அமெரிக்கரைக் கூட அமைச்சராகவோ அல்லது அதிகாரம் கொண்ட சிவில் அதிகாரியாகவோ நியமிக்க முடியவில்லை. ஆனால், இங்கு இலவசமாகவே பல அமெரிக்கர்கள் அதிகாரத்தில் உள்ளனர்.

-இவ்வாறு கிண்டல் அடிக்கிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவு அமைப்பாளர்களில் ஒருவரான சிறிபதி சூரியாராய்ச்சி.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆலோசனை வழங்குபவர்கள் அனைவருமே இறக்குமதி செய்யப்பட்ட மூளைசாலிகளே. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய, ஜனாதிபதியின் ஆலோசகர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் அமெரிக்க பிரஜைகள். வெளிவிவகார அமைச்சின் ஆலோசகர் ஆஸ்திரேலிய பிரஜை. இவர்களுடன் அமைச்சர்களான மிலிந்த மொரகொட, டலஸ் அழகப்பெரும ஆகியோரும் வெளிநாட்டுப் பிரஜைகளே. வெளிநாட்டு மூளைகள் உள்நாட்டு மூளையை மழுங்கடித்துவிட்டன.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவின் அரசை அதன் ஆயுட்காலம் முடிவதற்கு முன்னரே கலைத்துவிட்டு இப்போது நியாயம் பேசுகின்றனர்.

இப்போது இருப்பதோ சட்டவிரோதமான ஓர் அரசு. வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டு தெரிவான 105 பேரில் இப்போது எத்தனைபேர் அரசுடன் இருக்கின்றனர்?

இப்போது யானைச் சின்னத்தில் போட்டியிட்டுவந்த ஒரு கும்பலே அரசுடன் ஒட்டிக்கொண்டுள்ளது. எனவே, இதனைப் பெரும்பான்மை அரசு என்று கூறமுடியாது. என்றும்தெரிவித்தார். (சி)

# பதுளை முன்னாள் எம்.பி. சூட்டுக்கு இலக்கானார்

பதுளை மாவட்டத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டுறவுப் பிரதி அமைச்சருமான ஆர். எம். கருணாரட்ண (வயது - 69) கடந்த திங்கட்கிழமை இரவு 9 மணியளவில் இனந்தெரியாதோரால் சுடப்பட்டு ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் குறித்து ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதும் அவரது பணிப்பின் பேரில் விசேட ஹெலிக்கொப்டர் மூலம் இவர் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு உடன் அழைத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

பதுளை ஹெப்பிட்டிபொலவில் உள்ள தனது அலுவலகத்தில் கருணாரட்ண இருந்தவேளை, அங்கு சென்ற மூவர் துப்பாக்கியினால் இவரைச் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.(க-07-123)

# இலங்கைக் கடற்படையால் 10 தமிழக மீனவர்கள் கைது

கொழும்பு, செப். 12

இலங்கைக் கடற்படையினரால் நடுக்கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழ்நாட்டு மீனவர்கள் 10 பேர் செவ்வாய்க்கிழமை அதிகாலையில் கைது செய்யப்பட்டனர் என்று இந்தியாவின் பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்றும் அந்த அதிகாரிகள் கூறினர். மீனவர்களின் 2 படகுகளையும் இலங்கைக் கடற்படை பறிமுதல் செய்துள்ளது. இது தொடர்பில் மீனவளத்துறை பிரதி இயக்குநர் வேல்பாண்டியன் கூறுகையில், இந்தியக் கடலோரக் காவல்படையிடம் தமிழ் நாட்டு மீனவர்களைக் கைது செய்திருப்பதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது - என்றார்.

இதனிடையே துப்பாக்கி முனையில் இந்திய மீனவர்களின் 9 படகுகளிலிருந்து இறால்களை இலங்கை கடற்படையினர் வீசி எறிந்துள்ளனர் என்றும் அச் செய்தியில்தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# திருமலை அரச அதிபர் செயலகம் 4ஆம் கட்டைக்கு இடம்மாற்றப்படவுள்ளது

கொழும்பு, செப். 12

திருகோணமலையின் அரச அதிபர் செயலகம் சிங்களக்குடியேற்ற செறிவுப்பகுதியான 4ஆம் கட்டைக்கு மாற்றப்படவுள்ளது.


திருகோணமலை ஹபரண - கண்டி சாலையில் சீனன்குடாவுக்கான திருப்பத்துக்கு அண்மையாக உள்ள 4ஆம் கட்டைக்கு திருகோணமலை அரச அதிபர் செயலகம் மாற்றப்படுகின்றது. தற்போது இச் செயலகம் திருகோணமலை பிரடெரிக் கோட்டையில் இயங்கிவருகின்றது. 4ஆம் கட்டை நகருக்கு தொலைவில் உள்ள சிங்களக்குடியேற்றச் செறிவு மிக்க பகுதியாகும்.

அங்கு அரச அதிபர் செயலகத்தை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த 9ஆம் திகதி நடைபெற்றது.

ஜனாதிபதியின் சிறப்பு ஆலோசகரும் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ அடிக்கல் நட்டு வைத்தார். திருகோணமலை அரச அதிபராக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி ஒருவரே பணியாற்றுகிறார்.

## மனிதனின் ஆற்றல் அனைத்திற்கும் ஆத்மாவே காரணம்

உடல் பஞ்சபூதங்களால் ஆனது. அது சடம். உணர்வு காரணமாகவே உடலனுபவம் ஏற்படுகிறது. மனம் என்பது அதிர்வு. மனம் காரணமாக உடல் அசைகிறது. ஆத்மாவின் ஒளிவீச்சு காரணமாக மனம் ஞானத்தைப் பெறுகிறது. ப்ரக்ஞானம் ப்ரம்மா என்றால் இடையறாத ஒன்றிணைந்த விழிப்புணர்வு என்று பொருள். மனிதனின் ஆற்றல்கள் அனைத்திற்கும் ஆத்மாவே காரணம். ஆத்மாவின் ஆற்றலை நாம் மறப்பதற்குக் காரணம் என்ன? கேன உபநிடதத்தில் ஒரு கட்டையுடன் மற்றொரு கட்டையை உரசிக் கடையும் போது நெருப்பு உண்டாவதாகக் கூறப்படுகிறது. மனதையும் புத்தியையும் குடைந்து ஆராயும் போது ஞானாக்கினி வெளிப்படுகிறது. அத்தகைய ஞானத்தைப் பெறுவதற்கான கால அளவுகள் வேறுபடுகின்றன. அறிவுணர்வு எல்லோருள்ளும் ஒளி வீசுகிறது. கதிரவனுக்கு ஒளி இயல்பானது போல மனிதனுக்கு சத்-சித் ஆனந்தம் இயல்பானது. ஆத்மசாட்சாத்காரம் பெறுவதற்கு, தன்னையுணர எந்த முயற்சியும் தேவையில்லை. இதன் இரகசியம் அறியாதவர்கள் பெருமுயற்சி செய்து மனத்தளர்ச்சி அடைகிறார்கள். தன்னைப்பற்றிய தன்னறிவு தனக்குள்ளேயே இருப்பதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இத்தகைய அறிவுணர்வு உடல் முழுவதிலுமே பரவியிருக்கிறது. நமது சரியான கடைமையை முறையாகப் புரியாததால் நமக்கு இத்தகைய துன்பங்கள் விளைகின்றன.



(நன்றி- மனிதனுள் உ[illegible])

சாயி சிந்தனை



செலிங்கோ ஆயுட் பகுதியின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளரான இலக்கணாவத்தை, உடுப்பிட்டியைச் சேர்ந்த கந்தசாமி நகுலநாதன் என்பவரின் அகால மரணத்தையடுத்து அவருடைய இழப்பீட்டுத் தொகையாக மூன்று லட்சம் ரூபா பெறுமதியான காசோலையை நெல்லியடிக்கிளையின் விற்பனை (பிராந்திய) முகாமையாளர் து.நிரோஜன் இறந்தவரது மகளான ந.தரணிகாவிடம் கையளிப்பதையும் அருகில் அவரது தாயார் திருமதி நளாயினி நகுலநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம். படத்தில் விற்பனை நிறைவேற்று அதிகாரி ஜே.பிரதீப், விற்பனை நிறைவேற்றுநர் சி.ராஜகுமார், விற்பனை அணித்தலைவர் செல்வி த.சோபா ஆகியோரும் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

'வித்தக விநாயகர் விரைகழல் சரணே'

அச்சுவேலி, உலவிற்குளம்

## ஸ்ரீசித்தி விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**எண்ணெய்க் காப்பு**

14.09.2007 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணி தொடக்கம் மறுநாள் சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை

**மஹாகும்பாபிஷேகம்**

*16.09.2007* ஞாயிற்றுக்கிழமை காலை7 மணி 18 நிமி. தொடக்கம் காலை 8 மணி 18 நிமிடம் வரையுள்ள சுப முகூர்த்த வேளையில்-

* குறிப்பு: மஹா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறும். விநாயக அடியார்கள் மெய்யன்புடன் ஆசாரசீலர்களாக வருகை தந்து இஷ்ட சித்தி களைப் பெற்றுய்யுமாறு வேண்டுகிறோம்.

(சி/53665) **தேவஸ்தான நிர்வாகி.**

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணகத்தில் 17 - 07 - 1932



விண்ணகத்தில் 12 - 08 - 2007

### அமரர் நாகமுத்து நாகலிங்கம்

தள்ளாத வயதிலும் உன் தந்தைக்கு பிதிர்க்கடன் செய்ய
பிந்தாமல் செல்ல வேண்டும் என்று புறப்பட்ட எம்குல விளக்கே!
ஆடி அமாவாசை அன்றோ ஆண்டவன் உமை அணைத்தானோ!
பிதாமகரே! பிதிர்க்கடன் செய்த நீர் ஆத்மசாந்தி பெறுக.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

'ஈஸ்வரி வாசம்'
3ஆம் கட்டை,
பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு. (64803)

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.

### சண்டிலிப்பாயில் புற்றுநோயாளருக்கு அன்பளிப்பு

வட. பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த ஆண் புற்றுநோயாளர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்பளிப்புகளை வழங்கவுள்ளது.

சங்கானை பட்டின சபை வீதியிலுள்ள மேற்படி சம்மேளன பணிமனையில் வைத்து இந்த அன்பளிப்பு வழங்கப்படும் என்று சங்க செயலாளர் செ.குமாரசிங்கம் தெரிவித்துள்ளார்.

(202-135)

### வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் தேரிவு

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்க புதிய நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவராக திருமதி எஸ்.ஜே. ரூபசிங்கமும் செயலாளராக திருமதி ஜெய சரவணபவ ஐயர், ஐ.சசிகுமார் ஆகியோரும் பொருளாளராக மதிமுகனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(203)

## வலயக் கல்வி அலுவலகம்- தென்மராட்சி
## கேள்வி அறிவித்தல் - 2007

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டட வேலைகளைப் பூர்த்தி செய்ய தென்மராட்சிக் கல்விவலயப் பணிப்பாளரும் கேள்விச்சபைத் தலைவருமாகிய என்னால் கேள்வி அறிவித்தல் செய்யப்படுகிறது.

அ) ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுத் புத்தகம் 2007 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் இவ்வேலையைச் செய்து முடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ) இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப் பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது. அட்டவணை இல.1,2 வேலைகளுக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விண்ணப்பிக்கலாம்.

கேள்விப் பத்திரங்களின் பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்பட்ட கேள்வித் தொகை, பெறுமதி சேர்வரி (Vat) 15% சேர்க்கப்படாத கேள்வித் தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக் காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 14.09.2007 ஆம் திகதியிலிருந்து 24.09.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை தென்மராட்சிக் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும், வேலை விவரமும் | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளளிக்க கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/மட்டுவில் சரஸ்வதி வித்தி. பாடசாலைக் கட்டடத் திருத்தம் 50'x25' | 100/= | 500/= | M 10 |
| 02 | யா/மீசாலை கமலாம்பிகை வித்தி. பாடசாலைக் கட்டடத் திருத்தம் 50'x25' | 250/= | 875/= | M 10 |
| 03 | யா/மட்டுவில் அ.த.க.பா.விஞ்ஞான ஆய்வுகூடம் நிர்மாணித்தல் 30'x20' | 500/= | 4100/= | M 9 |
| 04 | யா/ அல்லாரை அ.த.க.பா.விஞ்ஞான ஆய்வுகூடம் நிர்மாணித்தல் 30'x20' | 500/= | 4450/= | M 9 |
| 05 | யா/ இயற்றாலை அ.மி.த.க.பா. வகுப்பறை நிர்மாணித்தல் 40'x20' | 500/= | 4320/= | M 9 |
| 06 | யா/ நாவற்குழி ம.வி. பாடசாலை கட்டடத்திருத்தம் 120'x25' | 250/= | 875/= | M 10 |
| 07 | யா/கைதடி விக்கினேஸ்வரா வித்தி. மிகுதி வேலை | 250/= | 2070/= | M 10 |

விண்ணப்பங்கள் யாவும் இருபிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், என்னால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு, கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2007 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப.10.30 மணிக்கு கேள்விப்பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

கேள்வி ஆவணங்கள் இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களை பாடசாலை வேலைகள் கிளையிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம்,
தென்மராட்சி, சாவகச்சேரி.11.09.2007 (சி.53671)

**திருமதி அ.வேதநாயகம்,**
வலயக்கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

## நகரசபை, சாவகச்சேரி
## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 21.09.2007 ஆம் திகதி 10 மணி வரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதே தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளின் பொருட்டு நிர்மாண பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) தரம் M 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகைமையுடையவராவர்.

கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாண பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விவரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ. சதம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (+VAT) ரூ. சதம் | வேலை முடிவுறுத்த வேண்டிய திகதி |
|---|---|---|---|---|
| 01 | அலுவலகக் கட்டடத் திருத்தம் கட்டடம் III, கட்டடம் IV | 10,000.00 | 575.00 | 31.10.2007 |
| 02 | அலுவலக வாகனப் பாதுகாப்பு கொட்டகை தொடர் வேலை | 11,000.00 | 575.00 | 30.11.2007 |
| 03 | மடத்தடி கிழக்கு வீதி திருத்தம் | 5,000.00 | 575.00 | 30.11.2007 |
| 04 | கேணியடி வீதி திருத்தம் | 5,000.00 | 575.00 | 30.11.2007 |
| 05 | சிவன்கோயில் வெளிவட்ட வீதி | 4,500.00 | 575.00 | 30.11.2007 |
| 06 | சப்பச்சிமாவடிப் பிள்ளையார் வீதி | 4,000.00 | 575.000 | 30.11.2007 |
| 07 | ஆனைக்கோட்டை வீதி | 1,500.00 | 575.00 | 30.11.2007 |
| 08 | உதயசூரியன் ச.ச.நிலையம் திருத்தம் | 3,000.00 | 575.00 | 30.11.2007 |
| 09 | காந்தாளம்பிட்டி வீதி மதகு அமைத்தல் | 2,500.00 | 575.00 | 30.11.2007 |

கேள்விப்பத்திரங்கள் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 19.09.2007 ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை மேற்குறித்த கேள்வி வைப்பு பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.


கேள்விப் படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதி **செயலாளர், நகரசபை, சாவகச்சேரி** என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ கேள்விப் பெட்டியில் இடவேண்டும். இணைப்பிரதி **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பண்ணை வீதி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 21.09.2007ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**நகரசபை அலுவலகம்,**
**சாவகச்சேரி.12.09.2007** (சி.53664)

**திருமதி த.[illegible],**
*செயலாளர்,*
*நகரசபை, சாவகச்சேரி.*

## பிறந்த நாள் நினைவலைகள்



**தோற்றம் 15-09-1969**

**மறைவு 26.04.2006**

### அமரர் த.கமலலோஜன் (கமல்)

(தொழில்நுட்பக் கல்லூரி பாதுகாப்பு உத்தியோகத்தர்)

காலமெல்லாம் எம் அருகில் இருந்து
கனிவுடனே வாழ்ந்திடுவோம் என்றிருக்க
கயவர்களின் சதியினால் சடுதியாய் மறைந்தாலும்
உம் நினைவுடன் காலமெல்லாம்
உங்களுக்காக ஏங்கிப் பரிதவிக்கும்
அன்பு உள்ளங்களின்
பிறந்த நாள் நினைவலைகள்.

என்றும் உங்கள் பிரியமுள்ள:
அன்பு மனைவி, மாமா, மாமி, மைத்துனர்மார்,
உடன்பிறவாச் சகோதரர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (64806)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# உலக நாடுகளின் உதவிகளை இழந்து வரும் இலங்கை

நாட்டின் பொருளாதாரத்தைத் தவறாகக் கையாளுகின்றமை, நல்லாட்சி முறைக்கான அடிப்படைகளைக் கைவிட்டமை, தேசிய இனப்பிரச்சினையை அமைதி வழியில் தீர்ப்பதற்கான பரந்த - விசால - கொள்கை நடைமுறையைத் துறந்தமை ஆகியவை தொடர்பான போக்குகளால் இலங்கை அரசு சர்வதேச நல்லுறவைப் படிப்படியாக இழந்து வருகின்றது என்று இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டி.வந்தோம்.

ஏற்கனவே இலங்கை அரசின் போக்கு மற்றும் அராஜகச் செயற்பாடுகள் காரணமாக சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அரசுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருக்கின்றன. பல சர்வதேசத் தரப்புகள் கண்டனக் கணைகள் எழுப்பியிருக்கின்றன.

பல நாடுகள் இலங்கைக்கு எதிரான தமது அதிருப்தியை வெளிப்படுத்துவதற்காக இலங்கைக்கான தமது உதவித் திட்டங்களை வெட்டிக் குறைக்கத் தொடங்கியுள்ளன.

குறிப்பாக இலங்கை அரசின் நல்லாட்சி விரோதப் போக்கு ஐரோப்பிய நாடுகளையே பெரும் அதிருப்திக்குள்ளும் விசனத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றன.

ஏற்கனவே பிரிட்டன் சில உதவித்திட்டங்களை நிறுத்தியுள்ளது. அந்த வழியில் ஜேர்மனியும் இலங்கைக்கான தனது பல உதவித்திட்டங்களை ஒரேயடியாக முடக்கியிருக்கின்றது.

டென்மார்க்கும் கூட அதே அதிருப்தி நிலையை எட்டியிருப்பதாகக் கூறப்படுகின்றது. இலங்கையில் டென்மார்க்கிற்குத் தனியாக ஒரு தூதரகம் இல்லை. பிரதிநிதி அலுவலகம் ஒன்றையே அது திறந்து வைத்திருந்தது. அந்த அலுவலகத்தை தனியான தூதரகமாகத் தரம் உயர்த்தத் திட்டமிட்டிருந்த டென்மார்க், அந்தத் திட்டத்தைக் கைவிட்டது மட்டுமன்றி, தற்போதைய பிரதிநிதியின் அலுவலகத்தையே மூடிவிட்டு, மூடை, முடிச்சுகளோடு வெளியேறவே தீர்மானித்து விட்டதாகத் தெரிகின்றது.

இந்த வரிசையில் மற்றொரு ஸ்கண்டிநேவிய நாடான சுவீடனும் இணைந்திருப்பதாக இப்போது செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இலங்கைக்கான தனது உதவித்திட்டங்களை அடுத்த இரண்டு முதல் நான்கு வருடங்களுக்குள் முற்றாக நிறுத்திவிட அது முடிவுசெய்துவிட்டது.

சுவீடனில் கடந்த வருடம் ஆட்சிக்கு வந்த புதிய அரசு எதிர்காலத்தில் தனது நாடு உதவி வழங்கும் சர்வதேச நாடுகளின் விவரத்தைப் பட்டியலிட்டுள்ளது. அதில் இலங்கை இல்லை எனத் தெரியவருகின்றது.

சுவீடன் அரசின் உதவித் திட்டங்கள் பெரும்பாலும் 'சிடா' (சுவீடன் சர்வதேச அபிவிருத்தி கூட்டிணைவு ஏஜென்ஸி) என்ற அமைப்பு ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. அந்த அமைப்பு உலகின் எழுபது நாடுகளில் தனது உதவித் திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

சுவீடன் அரசின் புதிய தீர்மானத்தின்படி 'சிடா' அமைப்பு இலங்கையில் புதிதாக எந்த அபிவிருத்தித் திட்டங்களையும் இனிமேல் பொறுப்பேற்காது. பெரும்பாலும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையில் இருக்கும் அபிவிருத்தித் திட்டங்களைக் கையாள்வதோடு அதன் பணி இங்கு முடிவுக்கு வந்துவிடும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலகளாவிய ரீதியில் சுவீடனின் சர்வதேச உதவித்திட்டங்களின் வருடாந்தப் பெறுமதி சுமார் முந்நூறு கோடி அமெரிக்க டொலராகும். இந்த வருடம் இலங்கையில் அந்த நாடு மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களின் நிதிப் பெறுமதி சுமார் ஒன்றரைக் கோடி அமெரிக்க டொலர் (சுமார் 165 கோடி ரூபா) ஆகும். அந்த நாட்டின் புதிய உதவித் திட்டங்கள் எவையும் இனி இலங்கைக்கு இல்லை என்றாகிவிட்டது.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மிக மோசமான வீழ்ச்சியை இப்போது பூர்த்தியாகியிருக்கும் இரண்டாவது காலாண்டில் வெளிப்படுத்தி நிற்கின்றது.

நாட்டின் பொருளாதாரப் பின்னடைவை பணவீக்க அதிகரிப்பு அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. பணவீக்கத்தால் ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிப்பதற்காக இலங்கை மத்தியவங்கி, குறுகிய காலத்துக்குள் ஆறாவது தடவையாக வட்டிவீத உச்ச எல்லையைத் தொடர்ந்து அதிகரித்திருக்கின்றது. அது கடந்த ஐந்து வருட காலத்துக்குள் மிக உச்ச அதிகரிப்பை இப்போது எட்டி 10.5 வீதம் என்ற நிலையைத் தொட்டு நிற்கின்றது.

இந்த அரசுத் தலைமையின் யுத்தத் தீவிரப் போக்கை நிறைவு செய்வதற்காக நாட்டின் பெருந்தொகை நிதி வளம் யுத்தத்துக்குத் திருப்பப்படுகின்றது. மறுபுறம் ஊழலும், மோசடியும், முறைகேடுகளும் நிர்வாகத்தில் தலைவிரித்தாடுகின்றன. இவற்றின் காரணமாக நாட்டின் பொருளாதார நிலைமை மீளவே முடியாத நிலையில் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் சர்வதேச சமூகமும் - இந்த அரசுத் தலைமையின் போக்கால் சினமும் அதிருப்தியுமுற்று - இலங்கைக்கான தனது உதவித் திட்டங்கள், அபிவிருத்தி உதவிகள் ஆகியவற்றைக் கைவிடுமானால் மீட்பர் இல்லாத அவலத்துக்குள் இந்த நாடு அழுந்தும் ஆபத்து ஏற்படும்.

அந்த ஆபத்தை நோக்கி, நாடு மெல்லமெல்ல நகர்ந்து கொண்டிருப்பதாகவே தோற்றுகின்றது.

மாறிவரும் சர்வதேச எண்ணப் போக்கைப் புரிந்து கொண்டு இலங்கை அரசுத் தலைமை தன்னை மாற்றிக் கொள்ளாவிட்டால், நாடு தனிமைப்படுத்தப்பட்டு பெரும் பின்னடைவுகளை எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும்.

# இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவிடம் வற்புறுத்து

கொழும்பு,செப். 13

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அந்த நாட்டின் மீது கடுமையான தீர்மானங்களை ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுவரவேண்டும் என்று அமெரிக்காவின் நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத்தொடரில் தெரிவித்துள்ளது.

மேற்படி கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருவது தெரிந்ததே.

இது தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆய்வாளர் சாறுலற்றா நேற்றுத் தெரிவித்துள்ளவை வருமாறு:-

இலங்கையில் அரசினாலும் விடுதலைப் புலிகளினாலும் மேற்கொள்ளப்பட்டுவரும் மனித உரிமை மீறல்கள் கண்டனத்திற்குரியவை. இலங்கையில் ஐ.நாவின் மனித உரிமைகள் அமைப்பின் கண்காணிப்பாளர் குழுவை அமைப்பதற்கான கோரிக்கைக்கு நாம் ஆதரவு அளிக்கின்றோம்.

இலங்கை அரசைச் சாடும் வகையில் ஓர் அறிக்கையை நாம் அண்மையில் வெளியிட்டிருந்தோம். ஏனெனில் அரச படையினரால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்துவதில் அரசு அக்கறை கொள்ளவில்லை அல்லது செயற்றிறனற்றதாக உள்ளது என்பதனாலேயே அவ்வாறான அறிக்கையை வெளியிட்டோம்.

**கடத்தல்கள், காணாமற்போதல்கள் தொடர்கின்றன**

கடத்தல்களும், காணாமற்போதலும் கொழும்பில் தற்காலிகமாகக் குறைந்துள்ளன. எனினும் ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்கள் தமது உறவினர்கள் அடையாளம் தெரியாத நபர்களால் கடத்தப்படுகின்றனர் எனத் தொடர்ந்து முறைப்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

கடந்த ஒகஸ்ட் மாதத்தின் முதல் மூன்று வாரங்களில் மட்டும் யாழ். குடாநாட்டில் 21 பேர் பலவந்தமாக காணாமற்போகச் செய்யப்பட்டுள்ளனர் எனவும், 13 பேர் நீதிக்குப் புறம்பாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் எனவும் யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதிக்கு முதலான மூன்று கிழமைகளில் 34 கடத்தல்கள் நாடு முழுவதும் பதியப்பட்டுள்ளன என செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு செப்டெம்பர் 3 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் கடத்தல்களில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் 16 பேரை இலங்கைப் பொலிஸார் கைதுசெய்திருந்தனர். அவர்களில் நால்வர் பொலிஸார். ஒருவர் விமானப் படை உறுப்பினர். தன்பின்னர் கடத்தல் வலையமைப்பைத் தான் முறியடித்து விட்டதாக அரசு தெரிவித்திருந்தது.

ஆனால் கிடைக்கும் அறிக்கைகளின் படி அதன் பின்னரும் பலவந்தமாக காணாமற்போகச்செய்தல், இடம்

## இடம்பெயர்ந்த மக்கள் பாதுகாப்பற்ற பகுதிகளில் படையினரால் பலவந்தமாகக் குடியமர்த்தப்படுகின்றனர்

பெயர்ந்த மக்களைப் பாதுகாப்பற்ற பகுதிகளில் பலவந்தமாகக் குடியமர்த்தல், ஊடகங்கள் மீதான கட்டுப்பாடுகள், கருணா குழுவினருடனான தொடர்புகள், அதிகளவான மனித உரிமை மீறல்கள் போன்றவற்றில் இலங்கைப் படையினரின் தொடர்புகள் உள்ளன என்பது தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். சிறார்களைப் படையில் பயன்படுத்துதல், கனடா, பிரித்தானியா போன்ற நாடுகளில் பலவந்தமாக நிதி சேகரித்தல், படுகொலைகள் போன்றவற்றில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். எனவே விடுதலைப் புலிகள் மீதும் ஐ. நா. தடைகளைக் கொண்டு வர வேண்டும்.

அனைத்துலகத்தில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது தொடர்பான ஆய்வை நாம் வெளியிட்டிருந்தோம். அதனை இலங்கை அரசு தனது சமாதானப் பணியக இணையத் தளத்தில் பிரசுரித்ததுடன் ஐரோப்பாவில் விடுதலைப் புலிகளைத் தடை செய்வதற்கும் அதனைப் பயன்படுத்தியிருந்தது. - என்றார் அவர்.

(சி)

# ஆழிப்பேரலை அபாயம் தெரிந்து கரையோர மக்கள் இடம்பெயர்ந்தனர்

நெல்லியடி,செப்.13

ஆழிப்பேரலை அபாயம் குறித்து எச்சரிக்கப்பட்டதைத் தொடர்ந்து வடமராட்சிக் கரையோரப் பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சுமார் ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள பகுதிகளை நோக்கி நேற்றிரவு இடம்பெயர்ந்தனர்.

மணற்காடு, குடத்தனை, கற்கோவளம், முனை, பருத்தித்துறை, இன்பருட்டி, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது வீடுவாசல்களைவிட்டு இடம்பெயர்ந்து உள்ளே சென்று உறவினர்கள் வீடுகளிலும் பாடசாலைகளிலு[illegible]ங்கினர்.

மக்கள் வீதிகளில் சென்று கொண்டிருந்தவேளை இராணுவத்தினர் ஆழிப்பேரலை அபாய எச்சரிக்கை குறித்து மக்களுக்குத் தெரிவித்துப் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தினர்.

வானொலி மற்றும் வேறு வழிகளிலு[illegible] ஆழிப்பேரலை அபாயம் குறித்துக்கிடைத்த தகவலைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்பான தூர இடங்களுக்குச் சென்றிருந்தனர்.

ஆழிப்பேரலை ஆபத்து நீங்கியதாக அறிவிக்கப்பட்ட பின்னர் மக்களில் சிலர் தமது வீடுகளுக்குத் திரும்பிய போதிலும் பெரும்பாலானோர் வந்த இடத்திலேயே தங்கியிருந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய கடற்கரைப் பகுதிகளைச்சேர்ந்த மக்களும் நேற்றுமாலை இடம்பெயர்ந்தனர்.

ஆழிப்பேரலைத் தாக்கம் இடம்பெறாது என அறிவிக்கப்பட்டதை அடுத்து அவர்கள் தமதுசொந்த இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

(அ-115-155-1)

## திருமலையில் நேற்று பொலிஸார் மீது குண்டுவீச்சு

திருகோணமலை, செப்.13

திருகோணமலை அநுராதபுரச் சந்தியில் உள்ள தொழில் நுட்பக் கல்லூரிக்கு அருகில் நேற்றுப் பிற்பகல் 1.15 மணியளவில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அவர் திருகோணமலை, பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டி ருக் கிறார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றவியல் புலனாய்வுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# படுவான்கரைப் பகுதிகளைச் சேர்ந்த அகதிகளின் 20ஆயிரம் மாடுகளை அரசுடைமையாக்குவதற்கு முயற்சி!

மட்டக்களப்பு படுவான்கரையில் அகதிகளாகியுள்ள மக்களின் 20 ஆயிரம் மாடுகளை கட்டாக்காலி மாடுகள் என்று குறிப்பிட்டு அவற்றைப் பொலன்னறுவை தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்கப் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பதுளை - செங்கலடி வீதியான 'ஏ - 5' வீதியில் அமைந்துள்ள படையினரின் முகாம்களுக்கு இந்த மாடுகள் தொடர்ந்து தொல்லை கொடுத்து வருவதனாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாடுகள் முகாம்களுக்குத் தொல்லை தருகின்றன என்று படையினர் தமது படை அதிகாரிகளுக்குத் தெரிவிக்க, அவர்கள் இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கும் கால்நடை அபிவிருத்தி அமைச்சுக்கும் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இந்த மாடுகள் அனைத்தும் கட்டாக்காலி மாடுகள் என்றும் இவற்றை அகற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் படை அதிகாரிகள் இந்த இரண்டு அமைச்சுகளுக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

இதனைத் தொடர்ந்து இந்த மாடுகள் அனைத்தையும் பொலன்னறுவையில் உள்ள தேசிய கால்நடை அபிவிருத்திச் சபையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சு மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது எனத் தெரிகின்றது.

**மட்டக்களப்புச் செயலகத்தில் நளை விசேட கூட்டம்**

இவ்விவகாரம் தொடர்பாக ஆராய்வதற்காக நாளை 14 ஆம் திகதி மட்டக்களப்பு செயலகத்தில் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

மட்டக்களப்பு அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், படை அதிகாரிகள் மற்றும் கால்நடை அபிவிருத்தி அமைச்சின் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டு இவ்விவகாரம் தொடர்பாக இறுதி முடிவெடுக்கவுள்ளனர்.

இதேவேளை, இம்மாடுகள் கட்டாக்காலி மாடுகள் இல்லை என்றும்-

தாம் படுவான்கரையில் இருந்து மாடுகளையும் ஏனைய சொத்துக்களையும் அப்படியே விட்டுவிட்டு வெளியேறவேண்டி ஏற்பட்டதால் அவை கட்டாக்காலிகளாகின என்றும்-

அம்மாடுகளின் சொந்தக்காரர்களான படுவான்கரையில் இருந்து இடம்பெயர்ந்த அகதிகள் கூறுகின்றனர்.

தம்மை மீளக்குடியேற அனுமதித்தால் இந்த மாடுகள் கட்டாக்காலிகளாக அலையவேண்டிய அவசியம் ஏற்படாது என்றும், அவற்றைத் தாங்கள் பராமரித்து தமது தொழிலைக் கொண்டு நடத்துவார்கள் என்றும் அம்மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

படுவான்கரையில் இருந்து இடம் பெயர்ந்தவர்களுள் இன்னும் 20 ஆயிரம்பேர்வரை மீளக்குடியமராமல் இடம் பெயர்ந்த நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆவணி - 28 | வெள்ளிக்கிழமை 14.09.2007 |
| திதி : | திருதியை மு.இ. 11.03 |
| நட்சத்திரம் : | சித்திரை முழுவதும் |
| சுபநேரம் | : 06.03 - 07.33 |
| ராகுகாலம் | : 1.33 - 03.03 |

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வு கோரி ஆசிரியர்கள் இன்று அடையாளவேலைநிறுத்தம்

கொழும்பு,செப்.13

சம்பள அதிகரிப்புக்கோரி ஆசிரியர் சங்கங்கள் ஐந்து இன்று அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபடுகின்றன. ஏனைய ஆசிரிய சங்கங்களையும் அதில் பங்குபற்றுமாறு அவை ஐந்தும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளன.

இன்றைய போராட்டத்திற்கு தமிழ் ஆசிரியர்களும் அதிபர்களும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஆசிரிய சங்கங்கள் இந்தப் போராட்டம் அரசியல் நோக்கம் கொண்டதல்ல. அவர்களின் சம்பள உயர்வையே நோக்கம் கொண்டது - என்று இங்கை ஆசிரிய சங்கத் தலைவர் ஜோசப் ஸ்ராலின் உதயனுக்குத் தெரிவித்தார்.

1997 ஆம் ஆண்டுமுதல் ஆசிரியர்களின் உரிமைகளுக்காகப் போராட்டங்களை நடத்திவருகின்றோம். எந்த விதமான அரசியல் நோக்கமும் கொண்டதாகவோ அல்லது எந்த அரசியல்கட்சி சார்பான தாகவே எமது போராட்டங்கள் அமைய வில்லை.

ஆசிரியர்களின் உரிமைகளுக்காகவே போராடிவருகின்றோம். தொடர்ந்தும் அவர்களின் உரிமைக் காகவே போராடுவோம். - என்றும் அவர் தெரிவித்தார். (அ-1)

## துப்பாக்கி தவறுதலாக வெடித்து இருவர் காயம்

கொழும்பு,செப்.13

அம்பாறை, பக்கிமெட்டியாவப் பகுதியில் நேற்று விசேட அதிரடிப்படையினர் வைத்திருந்த துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் 2 அதிரடிப்படையினர் காயமடைந்திருக்கின்றனர்.

காயமடைந்த விசேட அதிரடிப்படையினர் இருவரும் அம்பாறை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். (சி)

முகத்தில் கரி பூசி உருமறைப்புச் செய்து வந்த குழுவால்

## கற்பிட்டியில் பெண் உட்பட மூவர் கைவிலங்கிட்டுக் கடத்தப்பட்டனர்

புத்தளம், செப். 13

முகத்தில் கரிபூசி உருமாற்றத்துடன் வந்த ஆயுததாரிகளால் பெண்ணொருவர் உட்பட மூவர் கடத்தப்பட்ட சம்பவமொன்று புத்தளம், கற்பிட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றது.

ஐந்து பேர் அடங்கிய ஆயுதக் குழுவொன்றே கற்பிட்டி வீடமைப்புத் திட்டத்திலுள்ள வீடொன்றினுள் அதிரடியாகப் புகுந்து அங்கிருந்த தேவதாஸ் அரியதாஸ் (வயது - 25), இரு மாதங்களுக்கு முன்னரே திருமணம் முடிந்திருந்த தேவதாஸ் சுபாஷினி (வயது - 24), இவர்களின் சித்தப்பா எனத் தெரிவிக்கப்படும் பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான என்.யசாரட்ண (வயது - 42) ஆகியோரைக் கைவிலங்கிட்ட நிலையில் 'கண்டர்' ரக வானத்தில் பலாத்காரமாகக் கடத்திச் சென்றது என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழ்க்கைத் தொழில், தொழில் நுட்பப் பயிற்சி பிரதி அமைச்சரும், கடத்தப்பட்ட மற்றும் காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளை மேற்பார்வை செய்ய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் முக்கியஸ்தருமான பெ.இராதா கிருஷ்ணனிடமும், புத்தளம் பொலிஸ் நிலையத்திலும் கடத்தப்பட்டோரின் உறவினர் சார்பில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இந்தக் கடத்தல் குறித்த தகவலை பிரதி அமைச்சர் இராதாகிருஷ்ணன் சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்க முயற்சி மேற்கொண்டு வருகிறார் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

## கொழும்பில் 21ஆம் திகதி சத்தியாக்கிரகம்

கொழும்பு, செப். 13

நாட்டில் இடம்பெற்றுவரும் படுகொலைகள், 'கடத்தல்கள் மற்றும் காணாமற்போகச் செய்தல் போன்ற வன்முறைக் கலாசாரத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போருக்கு எதிரான தேசிய முன்னணியின் ஏற்பாட்டில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்று இடம்பெறவிருக்கிறது.

இந்தப் போராட்டம் இம்மாதம் 21 ஆம் திகதி கொழும்பு, ஹைட்பார்க் மைதானத்தில் காலை 10மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெறும்.

இந்த விடயம் தொடர்பாக போருக்கெதிரான தேசிய முன்னணி கொழும்பு, நிப்போன் ஹோட்டலில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், அதன் தலைவர் குமார் ரூபசிங்க உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

நாட்டில் மக்களின் வாழும் உரிமை மறுக்கப்படுகின்றது. படுகொலைகள், ஆள்கடத்தல்கள் மற்றும் காணாமல் போகச்செய்தல் போன்றவை அரங்கேறிக்கொண்டிருக்கின்றன. இந்தப் படுகொலைக் கலாசாரத்தை இல்லாதொழித்து மக்களுக்கு வாழும் உரிமையை வழங்குவதே எமதுநோக்கமாகும்.

யுத்தம் நடைபெறாத பகுதிகளிலும் படுகொலைகள், கடத்தல்கள் நடக்கின்றன. இவ்விடயங்களைக் கவனிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுவால் எதுவித பயனும் கிட்டவில்லை.

எங்களையே நாங்கள் திருத்திக்கொண்டு, நேர் சீராக வாழும் முறைமையை உருவாக்க வேண்டும்.

எமது இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இன, மத பேதமின்றி அனைவரும் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கிறோம். - என்றார். (சி)

காணாமற்போயினர் எனக்கூறப்பட்ட

## தம்பதியாரின் சடலங்கள் சிலாவத்துறைக் காட்டில்!

கொழும்பு,செப்.13

படையினரின் இராணுவ நடவடிக்கை காரணமாக சிலாவத்துறை, முசலிப் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்தபோது காணாமற்போன தம்பதியர் தாக்குதலில் சிக்கி உயிரிழந்திருக்கின்றமை தெரியவந்துள்ளது என மன்னார் மறை மாவட்ட ஆயர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

சின்னையா சுப்பிமணியம் (வயது - 56) சுப்பிரமணியம் ரங்கம்மா (வயது - 50) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

சிலாவத்துறையில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் அவர்களது சடலங்கள் கிடக்கின்றன என்றும் -

இந்தச் சடலங்களை மீட்பதற்காக மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினருடன் கலந்துரையாடியுள்ளார் என்றும் - கூறப்படுகின்றது.

குறிப்பிட்ட சடலங்களை மீட்பதற்கு செஞ்சிலுவை சர்வதேச க் குழுவினர் படையினரின் அனுமதியை கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## ஆழிப்பேரலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமாத்திராத் தீவுக்கும், அந்தமான்- நிக்கோபார் தீவுகளுக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில், சுமாத்திராவின் பெங்குலூன் நகரில் இருந்து 130 கிலோமீற்றர் தென்மேற்கில் உள்ள கடற்படுக்கையில், சுமார் முப்பது கிலோமீற்றர் ஆழத்தில் இந்தப் புவியதிர்வு ஏற்பட்டது.

இந்தோனேசிய நேரப்படி நேற்று மாலை 6.10 மணிக்கு (இலங்கை நேரப்படி மாலை 4.40 மணிக்கு) ரிச்டரில் 8.2 அலகு அளவில் முதலாவது நிலநடுக்கம் ஏற்பட்டது. அதன் பின்னர் சற்று நேரம் கழிந்து 6.6 ரிச்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் இடம்பெற்றது.

இதனால், இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மாலைதீவு போன்ற இந்து சமுத்திர நாடுகளை ஆழிப்பேரலை தாக்கலாம் என்று எச்சரிக்கப்பட்டது.

இந்தப் பூமியதிர்வால் ஆழிப்பேரலை எழுந்தால் அது நேற்றிரவு சுமார் எட்டு மணியளவில் இலங்கைக் கரைகளை வந்து தாக்கும் எனக் கணக்கிடப்பட்டது.

இதனையடுத்து வடக்கு, கிழக்கு, தெற்கு, தென்மேற்குப் பிரதேசக் கரையோர மக்களுக்கு ஆழிப்பேரலை எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. இக்கரையோரங்களைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு உடன் விரையுமாறு ஊடகங்கள் மூலம் அவசர கோரிக்கைகள் தொடர்ந்து எழுப்பப்பட்டன.

### புலிகளின் பிரதேசத்தில்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களிலும் இந்த எச்சரிக்கை ஒலிபெருக்கி பூட்டிய வாகனங்கள் மூலம் விடுக்கப்பட்டது. 'புலிகளின் குரல்' வானொலியும் ஆழிப்பேரலை அபாய எச்சரிக்கையைத் தொடர்ந்து வெளியிட்டது.

விடுதலைப் புலிகளின் போராளிகளும், தமிழீழ காவல்துறையினரும் மக்களை அறிவுறுத்தி அவசர அவசரமாக வெளியேற்றும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

### கிழக்கில்

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் கரையோரப் பிரதேசங்களிலும் ஆழிப் பேரலைப் பீதி பெரும் பரபரப்பையும் , பதற்றத்தையும் நேற்று மாலை ஏற்படுத்தத் தவறவில்லை.

அங்கு மாத்திரமல்லாமல் அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை தென்பகுதி கொழும்புக்கு அப்பால் மேற்குக் கரையோரத்திலும் நேற்று மாலை ஆழிப்பேரலை பீதி காரணமாக இடம்பெயர்வு இடம்பெற்றது. மக்கள் முன்னைய அனுபவம் காரணமாக முன்னெச்சரிக்கையுடன்- புத்திசாதுரியமாக நடந்து கொண்டமையை எல்லாக் கரையோரப் பிரதேசங்களிலும் அவதானிக்க முடிந்தது.

ஆனால், ஆழிப் பேரலை அபாயம் நீங்கியது பற்றி யஅறிவிப்பு இரவு 8.30 மணியளவில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வெளியிடப்பட்டதை அடுத்து, எங்கும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டு வழமை வாழ்க்கை நிலைக்குத் திரும்பினர்.

### இந்தோனேஷியாவில்

பூமியதிர்வு காரணமாக இந்தோனேஷியாவில் பல கட்டடங்கள் சேதமடைந்தன. மரம் ஒனறு முறித்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார். (07 ஆம் பக்கமும் பார்க்க)

## படகுப் பயணத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத் தொண்டர்கள் மத்தியில் நெடுமாறன் பேசினார். பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கு உதவுவதற்காக மருந்து மற்றும் உணவுப்பொருட்களைச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் சட்டபூர்வமாக அனுப்புவதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை, அவற்றை அனுப்ப அனுமதி கிடைக்கவில்லை என்று நெடுமாறன் கூறினார்.

பின்னர் நெடுமாறன் தனது ஆதரவாளர்களுடன் மருந்து மற்றும் உணவுப்பொருள்களை எடுத்துக்கொண்டு படகுகள் மூலம் யாழ்.செல்லப் போகிறேன் எனத் தெரிவித்து நாகப்பட்டினம் கடற்கரைச் சாலைக்குச் சென்றார். ஆனால் அங்கு படகுகள் எதுவும் இருக்கவில்லை.

### படகுகள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன

அங்கிருந்த படகுகளை ஏற்கனவே அதிகாரிகள் அகற்றியிருந்தனர்.

நெடுமாறனின் உத்தேச பயணத்துக்கு படகுகள் கொடுப்போரின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் -

அந்தப் படகுகளின் உரிமையாளர்கள் கைது செய்யப்படுவர் என்றும் -

அதிகாரிகள் முதலிலேயே அப்பகுதி மீனவர்களை மிரட்டியிருந்ததால் அவர்கள் படகுகளை முன்கூட்டியே அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டியாயிற்று என்றும் - கூறப்பட்டது.

இதனால் ஏமாற்றமடைந்த நெடுமாறன் தமிழக அரசு தங்கள் போராட்டத்துக்கு எதிராகச் சதி செய்வதாகக் குற்றம் சுமத்தினர். படகுகளில் புறப்பட முடியாமல் போனதைத் தொடர்ந்து, நெடுமாறன் நாகப்பட்டினம் கடற்கரை அருகேயுள்ள சாலையில் தமது ஆதரவாளர்களுடன் அமர்ந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் இருக்கப்போகிறார் என அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து நெடுமாறன் தலைமையில் 10 பெண்கள் உட்பட 500 ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையே இராமேஸ்வரத்திலிருந்தும் படகுகள் மூலம் மருந்து மற்றும் உணவுப் பொருள்களுடன் இலங்கைக்குத் தாம் செல்லப்போகிறார்கள் என தமிழ்த் தேசிய இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 150 பேர் கொண்ட மற்றொரு குழுவினர் அறிவித்திருந்தனர்.

அவர்கள் காலவரையறையற்ற உண்ணாவிரதம் இருக்கப்போகிறார்கள் எனவும் அறிவித்தனர். ஆனால் அவர்களைப் பொலிஸார் கைது செய்யவுமில்லை, இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் இலங்கைக்குச் செல்ல அனுமதிக்கவுமில்லை. (சி)

## 83 தமிழர்களில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆஸ்திரேலியாவில் அகதி அந்தஸ்து கோரியிருந்த மேற்படி 83 இலங்கைத் தமிழர்களில் 72 பேருக்கு அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. ஒருவருக்கு மட்டுமே அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேலும் ஆறு பேர் மீது கிரிமினல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதால் அவர்களுக்கான அகதி அந்தஸ்து தொடர்பில் இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை. அந்த ஆறு பேர் உட்பட எண்மரின் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்துவருகிறோம்.

மேலும் இருவர் ஆஸ்திரேலியாவுக்கு வரும் முன்னரே இந்தோனேஷியாவில் அகதி அந்தஸ்து பெற்றிருந்தனர். அதனை ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான தூதரகம் உறுதிசெய்துள்ளது - என்றார். (சி)

MY COMPUTER இரண்டாவது இதழ் சகல இடங்களிலும். வெளியீடு: SPEED IT net, 021 4591871.

S.L.A.S போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள்
ஆரம்பம்: 16.9 (ஞாயிறு) 11 - 2
ஆசிரியர்கள்: அ.குமாரவேல், த. தவசேகர்
வகுப்புகள் ஒவ்வொரு ஞாயிறும் 11 - 2 மணிவரை நடைபெறும்.
யாழ்ப்பாணக் கல்லூரி, பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக).

இணைந்த கணிதம்
ஆசிரியர்: த.தவசேகர் B.Sc. P.G.D.E.
ஆரம்பம்:
சனி (15.09) மாலை 4.30
பகுதி I
சனி 4.30 - 6.00
பகுதி II
ஞாயிறு 4.30 - 6.00
சைடன் கல்வி நிலையம்
வட்டுக்கோட்டை

கணனிக் கற்கை நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன.
மிகக் குறைந்த கட்டணத்தில், விரிவான பாடத்திட்டம்
பிரிவு II 15.09.2007 காலை 10மணி
பிரிவு III 24.09.2007 காலை 10மணி
Diploma Courses
Diploma in Computer Hardware
Diploma in Video Editing
Diploma in Accounting Packages
Diploma in Microsoft Office
Diploma in Desktop Publishing
Diploma in Auto CAD
Diploma in Grapic Designing
Internet & E- Mail
சிறுவர்களுக்கான Certificate in KidWizard
Free Hand outs
Online Classes
St.Antony's Computer Litracy Academy
சென்.அன்ரனீஸ் கணனிஅறிவுசார் கல்வியகம்.
4th Cross Street, Point Pedro.
4ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.09.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org